## GOSPEL JOURNEY ERODE JANUARY 2016



R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2015-2017
Posted at Batlagundu Post office on 10th Mar 2016

**Our Radio & TV Programs**
Sri Lanka Radio SW 25,41 Meter
on Saturday 5.30P.M &Tamilan TV
on Monday &
Saturday 7.30 P.M

Cell : 94435 58041
Phone : 04543 263 278
E-Mail arjunanglory@gmail.com

**To**

Postman Remarks (If Undelivered):

- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

**Our Postal Address:**
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 16 | மார்ச் 2016 | கனி 4




## THE WORD OF CHRIST

"கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக" – கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்



# World Evangelism Gospel Media



**Arjunan in Tamil on Tamilan TV & Radio:**
TV:Every Monday 7.30-7.45 p.m and Every Saturday 7.30-7.45 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio.
*(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Sunny, Francis & Vinay David in Hindi on TV:**
Every Sunday and Tuesday 7.00-7.30 p.m on shubhSandesh Hind Channel.
*(NEW DELHI Contact Mobile: 09810896789)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hind Channel.
*(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV and Puthuyugam TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Tuesday 6.15-6.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Monday 7.00-7.15 a.m and Thursday 9.30-10.00 p.m and Saturday 7.15-7.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile: 09844 70763)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Rakshana TV:**
Every Sunday 6.00 p.m Every Wednesday 6.30 p.m Every Thursday 11.00 a.m Satyavani TV Online:www.Sakthitv.in Every Wednesday & Friday 8.00 p.m
*(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*


## THE WORD OF CHRIST
Monthly Magazine

**Editor**
**B.ARJUNAN**
**Associate Editor**
**K.R.K.Ravi Asir**


அநேகரைப்போல, நாங்கள் தேவவசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்டபிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவசந்தியில் பேசுகிறோம் - 2கொரி.2:17

## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
### மாத இதழின் உள்ளே...

ஆசிரியருரை
ஜெ.சி.சோட்,
பெட்டி சோட் அவர்களின் செய்தி
ஜெர்ரிபேட்ஸ், பவுலா பேட்ஸ்
அவர்களின் செய்தி மற்றும்
வேதபாடம்,
வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி
மற்றும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




# வேத அறிவுப் போட்டி எண்: 187

## போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை மே மாத இதழில்!

1. அத்திமரம் முதல் தொழுவத்திலே மாடு வரை இல்லாமற்போனாலும் நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன் என்ற தீர்க்கன் யார்?
2. பவுலையும் மற்றவர்களையும் பார்த்து: இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள் என்று சத்தமிட்ட பெண் யார்?
3. நான் அவர்களை எப்படித் தண்டித்தாலும், அவர்கள் அதிகாலையில் எழுந்து தங்கள் கிரியைகளையெல்லாம் எப்படி ஆக்கினார்கள்?
4. அவர்கள் ஆபிரகாமின் சந்ததியாரானாலும் எல்லாரும் பிள்ளைகளல்லவே; என எழுதும் அப்போஸ்தலன் யார்?
5. எந்த தீர்க்கதரிசியை கொண்டு என் வீடு பாழய்க்கிடக்கும்போது, நீங்கள் எல்லாரும் அவனவன் தன் தன் வீட்டிற்கு ஓடிப்போகிறீர்களே என்றார்?
6. மனைவியாகிய ஒரு சகோதரியை கூட்டிக்கொண்டு திரிய எங்களுக்கும் அதிகாரமில்லையா? என கேட்கும் அப்போஸ்தலன் யார்?
7. எருசலேம் எந்த நகரம் என்றும், சேனைகளுடைய கர்த்தரின் பர்வதம் பரிசுத்த பர்வதம் என்றும் அழைக்கப்படும் என்று கர்த்தர் சொன்னார்?
8. அநேகரைப்போல, நாங்கள் தேவ வசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல் என பவுல் எந்த சபையாருக்கு கடிதம் எழுதுகிறார்?
9. கர்த்தருக்குப் பயந்தவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்வார்கள் எவர் கவனித்துக்கேட்பார்?
10. யூதேயாதேசத்திலே கிறிஸ்துவுக்குள்ளான சபைகளுக்கு முகமறியாதவனாயிருந்தவன் யார்?

### போட்டியாளர்கள் கவனிக்க...

ஒவ்வொரு முறையும் விடை எழுதும்போது உங்களுடைய பதிவு எண் (அதாவது Ref.No) மற்றும் மொபைல் எண் எழுதவும். நமது மாத இதழை 100 பேருக்கு அறிமுகம் செய்து முகவரிகளை சேகரித்து ஆங்கிலத்தில் தெளிவாக மாவட்டம் மற்றும் பின்கோடு உடன் அனுப்பி வைப்பவர்களுக்கு ஒரு முழு வேதாகமம் பரிசாக கொடுக்கப்படும்.

### இம்மாதம் 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' நடத்தும் வேதபாட வகுப்புகளும் சுவிசேஷ கூட்டங்களும் 5

நாள்: மார்ச் 26 -ம் தேதி, சனிக்கிழமை
நேரம்: காலை 10 மணிமுதல் மாலை 2.00 மணி வரை
'நோவா இல்லம்'
வாட்டர் டேங் ரோடு, கூடலூர்
கம்பம், தேனி மாவட்டம்
சகல தொடர்புக்கும்:
சகோ:K.S. முருகேஷன் (எ) நோவா
8608651595



## குருவி
## Sparrow


- ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள் - மத்.6:26
- ஆண்டவர் இயேசு சொன்ன அடைக்கலான் குருவிகள் - லூக்.12:6,7
- அவருடைய பீடங்களண்டையில் அடைக்கலான் குருவிகளுக்கு அடைக்கலம் - சங்.84:3
- இவைகளை நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஐந்தாம் நாளில் உண்டாக்கினார் - ஆதி.1:20
- தகைவிலான் குருவியும் தாங்கள் வரத்தக்க காலத்தை அறியும் (தேவன் கொடுத்த ஞானம்) - எரே.8:7
- கிளைகள்மேலிருந்து பாடும் - சங்.104:12
- தன் கூட்டைவிட்டு அலைகிற குருவியைப்போல தன் ஸ்தானத்தைவிட்டு அலைகிற மனுஷனும் - நீதி.27:8



சிறுவர் பகுதி

# இது சம்பாத்திய காலமா?

**வேத வாசிப்பு: 2இராஜாக்கள்5:20-27** *K.Mohan*



தேவப்பிள்ளைகள் யாவருக்கும் கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். வேதத்தில் அநேக அற்புதங்களை பார்த்து வந்தோம். இன்று எச்சரிப்பான சில காரியங்களைக் குறித்துப் பார்ப்போம். மேற்கண்ட வேத வசனப் பகுதியில் நாம் பார்க்கும்போது படைத்தலைவன் நாகமான் தீர்க்கதரிசி எலிசா மூலம் குஷ்டரோகம் நீங்கி சுத்தமாகிறான். இந்த சம்பவத்தை குறித்து அநேகர் போதித்திருப்பார்கள். நாம் இன்று பார்ப்பது எலிசாவின் ஊழியக்காரன் கேயாசியைப் பற்றி. சுத்தமான நாகமான் கெஞ்சிக் கூத்தாடியும் ஒரு காசு கூட வாங்க எலிசா விரும்பவில்லை. தேவ மனுஷனுக்கு பொற்குவியல்கள் மேன்மையாக தோன்றவில்லை. ஆனால், கேயாசியின் கண்கள் ஆசைப்பட்டன. நான் அவன் பிறகே ஓடி அவன் கையிலே ஏதாகிலும் வாங்குவேன் என்று கர்த்தருடைய ஜீவன் மேல் ஆணையிட்டு மூச்சிரைக்க ஓடினான்.

அவனை கண்ட நாகமான் இரதத்திலிருந்து குதித்து சுகசெய்தியா என்று கேட்டான். அதற்கு கேயாசி ஒரு தாலந்து வெள்ளி இரண்டு மாற்று வஸ்திரம் என் எஜமான் கேட்டார் என்று பொய் சொல்லி, நாகமானிடம் பெற்றதை வீட்டிலே ரகசியமாக வாங்கி வைத்தான். எலிசா அவனைப் பார்த்து எங்கே இருந்து வந்தாய் என்றதற்கு எங்கும் போகவில்லை என்று மீண்டும் பொய் சொன்னான் அதற்கு எலிசா, நாகமான் இரதத்திலிருந்து திரும்புகிறபோது என் மனம் உன்னுடன் கூடச் செல்லவில்லையா? பணத்தை வாங்குகிறதற்கும், வஸ்திரம், ஒலிவதோப்பு, திராட்சதோட்டம், ஆடு, மாடு வேலைக்காரர்களை வாங்குகிறதற்கும் இது காலமா? என்றார். உடனே கேயாசி குஷ்டரோகியானான். அன்பான தம்பி தங்காய், இன்றும் அநேகர் வயிற்றுக்காக, வசதிக்காக, வருமான நோக்கத்தோடு ஊழியம் செய்வார்கள். அப்படிப்பட்டவர்கள் கேயாசியின் முடிவை மறந்துவிடக்கூடாது. உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம்.

**மனப்பாட வசனம்**

"பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள்" (1தீமோத்தேயு6:10)



தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 16 மார்ச்-2016 கனி - 4

ஆசிரியருரை

# பிள்ளைகள்
# Children



**பி**ள்ளைகள் என்றாலே பொதுவாக எல்லோருக்கும் பிடிக்கும். பிள்ளைகளை கர்த்தர் அதிகமாக நேசிக்கிறார். எதிர்கால உலகை கட்டி காக்கவேண்டிய பொறுப்பு பிள்ளைகளுக்கு இருக்கிறது. பிள்ளைகளுக்கு முதலாவது இருக்கவேண்டிய குணம். கீழ்ப்படிதல்; இந்த கீழ்ப்படிதல் இருக்கும்போது அனைத்து ஆசீர்வாதங்களும் அவர்களை தேடிவரும். நாம் வேதத்தில் வாசிக்கின்றோம்; "பிள்ளைகளே, உங்களைப் பெற்றாருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்; இது கர்த்தருக்குப் பிரியமானது" (கொலோ.3:20). பிள்ளைகள் பொதுவாக மற்றவர்களுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவார்கள் ஆனால் பெற்றாருக்குக் கீழ்ப்படிய மாட்டார்கள். பக்கத்து வீட்டில் இருக்கும் அங்கிள் சொல்லும் வார்த்தைக்கு உடனே கீழ்ப்படிவார்கள். அங்கிள் சொல்லுங்க உடனே வாங்கிக்கொடுக்கிறேன் என்பார்கள். அதே வேளையில் அப்பா சொல்லும் ஒரு வார்த்தைக்கு போங்கப்பா எனக்கு வேலை இருக்கு என்று மழுப்பிவிடுவார்கள். இது நாமறிந்ததே. ஆனால் வேதாகமம் பிள்ளைகள் பெற்றாருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என போதிக்கிறது.

சாலொமோன் ஞானி "உன்னைப் பெற்ற தகப்பனுக்குச் செவிகொடு; உன் தாய் வயதுசென்றவளாகும்போது அவளை அசட்டைபண்ணாதே" என்று நீதி.23:22-ல் சொல்லுகிறார். நாங்கள் வழிநடத்துகிற சபையில் ஒரு குடும்பம் உண்டு அவர்களுக்கு இரு பிள்ளைகள் இருக்கிறார்கள். மூத்தபிள்ளை பெண்பிள்ளை இரண்டாவது ஆண்பிள்ளை. மூத்த பிள்ளையிடம் ஒருகேள்வி கேட்டோம். அந்தபிள்ளை L.K.G படித்துக் கொண்டிருக்கிறாள். உனக்கு அப்பா பிடிக்குமா அல்லது அம்மா பிடிக்குமா என்று கேட்டோம். பொதுவாக பிள்ளைகளை அப்பா பிள்ளை அம்மா பிள்ளை என்று சொல்லி வளர்ப்பார்கள். ஆகையால் பிள்ளைகள் அம்மாவை பிடிக்கும் அல்லது அப்பாவை பிடிக்கும் என்பார்கள். ஆனால் அந்தப் பிள்ளையோ அம்மாவையும் பிடிக்கும் அப்பாவையும் பிடிக்கும் என்றது. மிக சிறப்பான பதிலை கொடுத்தது. அந்த பிள்ளையின் பெற்றொர்கள் இதைக்கேட்டு மிகவும் சந்தோஷப்பட்டனர். சாலொமோன் ஞானி உன்னைப் பெற்ற தகப்பனுக்குச் செவி கொடு என்றும் உன் தாய் வயது சென்றவளாகும்போது அவளை அசட்டைபண்ணாதே என்றும் குறிப்பிடுகிறார். இன்றைக்கு அநேக குடும்பங்களில் பிள்ளைகள் பெற்றோர்களை அசட்டைபண்ணி முதியோர் இல்லங்களில் சேர்த்துவிடுகிறார்கள். அதற்கு ஒரு நொண்டிச்சாக்கு சொல்லுகிறார்கள். நாங்கள் இருவரும் வேலைசெய்கிறோம். ஆகையால் எங்களுடைய பெற்றோர்களை பராமரிக்க ஆட்கள் இல்லை. ஆகையால் முதியோர்

இல்லத்தில் சேர்த்து பணம்கொடுக்கிறோம். வேதாகமத்தில் சொல்லப்பட்டபடி கொர்ப்பான் என்னும் காணிக்கை கொடுத்துவிட்டால் கடமை முடிந்துவிட்டது என்று எண்ணி கொள்கிறார்கள். அன்பானவர்களே, முதியோர்கள், நாம் குழந்தைகளாக இருக்கும்போது எப்படி பராமரித்தார்களோ அதைப்போல அவர்களை நாம் பராமரிக்கவேண்டும். இதை நீங்கள் செய்துகொண்டிருக் கிறீர்களா? சில பெற்றொர்கள் இருக்கிறார்கள். கர்த்தரை ஏற்றுக்கொண்டவுடன் ஏதோ செய்யக்கூடாத ஒரு காரியத்தை மகன் செய்துவிட்டதுபோல நினைத்து துரத்திவிடுவார்கள். இந்த விஷயத்தில் வேதாகமத்தின் போதனை என்னவென்றால்; "பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம்" (எபே.6:1). தகப்பன் ஒரு விக்கிரகாரதனைக்காரராக இருக்கும்போது மகன் அவருக்குக் கீழ்ப்படிந்து விக்கிரகாராதனை செய்யவேண்டிய அவசியமில்லை. இந்த விஷயத்தில் அந்தபிள்ளை கர்த்தருக்குக் கீழ்ப்படியவேண்டியவனாயிருக்கிறான். தன்னுடைய கிறிஸ்தவ ஜீவியத்தினால் தன் தகப்பனுடைய குடும்பத்தை ஆதாயம் செய்யவேண்டிய பொறுப்புடையவனாயும் இருக்கிறான். இதினிமித்தம் அவர்களை அவன் வெறுக்காதவனாயும் இருக்கவேண்டும். ஏனெனில் கட்டளையில் நாம் பார்க்கும்போது "உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக' என்று சொல்லப்பட்டிருக்கிறது எனவே, அவன் தன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணவேண்டும்.

பிள்ளைகளை கர்த்தர் நேசிக்கிறார். இயேசுவின் நாட்களில், சிறுபிள்ளைகளை சீஷர்கள் அதட்டினார்கள்; "இயேசுவோ; சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; பரலோகராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது என்று சொன்னார்" (மத்.19:14). குழந்தையும் தெய்வமும் ஒன்று என்று சொல்வார்கள். ஏனென்றால் குழந்தைகளிடம் எந்தவிதமான கள்ளங்கபடமும் இருக்காது. ஆகையால் அப்படிச்சொல்லுகிறார்கள். மற்றபடி குழந்தை தெய்வமாகிவிடாது. பிள்ளைகளை கர்த்தர் நேசிக்க பல காரணங்கள் உண்டு. ஒன்று பரலோகராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது. ஒருவன் கிறிஸ்துவுக்குள் வரும்போது ஒரு குழந்தையைப்போல மாறவேண்டியவனாக இருக்கிறான். வயதிலோ அல்லது எடையிலோ அல்ல. குழந்தைகளுடைய குணத்திலும் அவர்கள் பாலின்மேல் வாஞ்சையாயிருப்பதைப்போல, அவன் கர்த்தருடைய வசனத்திலே வாஞ்சையுள்ளவனாக இருக்கவேண்டும். பிரசங்கி சொல்லுகிறான்; "நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை; தீங்குநாட்கள் வராததற்கு முன்னும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்குமுன்னும்" என்று படிக்கிறோம் (பிர.12:1). வாலிப வயது மிகவும் அற்புதமான வயது என்றே சொல்லவேண்டும். நன்கு யோசித்து முடிவு எடுக்கும் வயது, தானே முடிவு எடுக்கும் வயது, நல்லது கெட்டதை அறியும் வயது, முழுபெலமும் உள்ள வயது. இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். இந்த வயதில் நீ உன் சிருஷ்டிகரை நினை என வேதம் சொல்லுகிறது. இந்த வயதில் கர்த்தரை ஏற்றுக்கொண்டவர்கள் சலுகைக்காகவோ, அல்லது படிப்பிற்காகவோ, அல்லது திருமணத்திற்காகவோ கர்த்தரை ஏற்றுக்கொண்டிருக்கமாட்டார்கள். ஏனெனில் நன்கு சிந்தித்து செயல்படுகிற வயது அல்லவா, அவர்களாக பலஇடங்களில் நடக்கும் சம்பவங்களையும், செயற்பாடுகளையும் பார்த்து முடிவு எடுக்கும் பக்குவமான வயதை உடையவர்களாக இருக்கிறபடியால் இந்த வயதில் முடிவு எடுப்பவர்கள் கர்த்தருடைய பிள்ளையாக வருவதற்கு சிறப்பான வாய்ப்புகள் அதிகம் உள்ளது. ஆகையால் மற்ற வயதில் கர்த்தரை ஏற்றுக்கொண்டவர்கள் சிறப்பானவர்கள் அல்ல என்று நான் சொல்லவில்லை. அவர்களும் சிறப்பானவர்களே. வேதாகமம் இந்த வயதை முக்கியமாக குறிப்பிடுகிறது.

இளமை பிராயம் என்பது மிக முக்கியமானதே. ஆகையால் பவுல் தீமோத்தேயு என்ற வாலிபனுக்கு எழுதும்போது; "உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு" என எழுதுகிறார் (1தீமோ.4:12).



கொண்டுவந்தவர். (மற்ற 11 சீடர்களால் முடியாததை இவர் செய்து முடித்தார் அன்று, அந்திரேயா, அலெக்சாண்டர் என்ற பெயருக்கு ஆண்மகன், நினைத்ததை செய்து முடிப்பவன் என்றாகும் Alexander (Manly) மாவீரன்.

**8.** Anti - Christ Opposed to Christ கிறிஸ்துவுக்கு எதிராளி அந்தி கிறிஸ்து.

**9.** Apollos - Destroyer அழிம்பன், அப்.18:24) நாவண்மையுள்ள நாவலன், அலெக்சாண்டிரியா யூதன் நற்செய்தியாளர்.

**10.** Baal (பாகால்) - Master of Possessor தலைவன் எரே.7:9 பினெசியர், மற்றும் பெலிஸ்தியர்களின் ஆண் தெய்வம்

**11.** Balam - Lord of the People மக்களின் பிரபு எண்.225 ஜிப்பார் zippor னின் மகன் மோவாபிய அரசன்.

**12.** Balak - Emptywater வெறுமையானவன் (எண்.22:2).

**13.** Barak - Lightining மின்னல் ஒளியான் நியா.4:6 தெபோராளின் கீழ்ப்படிந்த தலைவன்.

**14.** Barnabas - Son of Consolation ஆறுதலின் மகன் அப்.4:36 சிப்புருவில் பிறந்த யூதன். பவுலின் தோழன்.

**15.** Boaz - Fleetness தெளிவானவர். நீரோடை ரூத்2:1 பெத்லேகேமில் (அப்பத்தின் வீடு) பிறந்தவர். செல்வமும் நற்பண்பும் நிறைந்த சீராளன். மோவாபிய பெண் ரூத்தின் கணவர் இவரின் சந்ததியில் தான் இயேசு கிறிஸ்து பிறந்தார்.

## ஆசிரியர் கடிதம்...

**வா**சகர் அனைவருக்கும் நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுவின் பரிசுத்தமான நாமத்தில் வாழ்த்துக்கள்.

'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' மாத இதழை நீங்கள் தொடர்ந்து பெற்று வருவீர்கள் என நம்புகிறோம். உங்களுடைய மேலான கருத்துக்களை எமக்கு எழுதி தெரியப்படுத்துங்கள். இவ்விதழை உங்களுடைய நண்பர் மற்றும் உறவினர்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள்.

நீங்கள் இவ்விதழின் வாசகரா! மாவட்டங்கள் தோறும் வேதவகுப்புகள் மற்றும் சுவிசேஷ கூட்டங்களை நடத்திவருகிறோம். இவ்வூழியத்தில் தாங்களும் இணைந்து எங்களோடு சேர்ந்து பணியாற்ற விரும்பினால் உடனே தொடர்பு கொள்ளுங்கள். 9443558041 என்ற மொபைல் எண்ணோடு தொடர்பு கொண்டு மேற்கொண்டு விபரங்களை தெரிந்துகொள்ளுங்கள். உங்களுக்காக உங்களுடைய மாவட்டத்திற்காக ஜெபிக்கிறோம்.

தேவ செய்திகள் அடங்கிய
CD & DVD எங்களிடம்
உள்ளது ரூ.100/-
அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்
உங்கள் முகவரி மற்றும்
மொபைல் எண்ணை SMS
பண்ணவும். **9443558041**





# வேதாகம அகராதி
## Bible Dictionary

John S.Nathan
9444443348

வேதாகமத்தை நாம் ஆராய்ந்து படிக்கும்போது சில எபிரெய, கிரேக்க வார்த்தைகளை காண முடிகிறது. குறிப்பிட்ட வார்த்தைக்கு முன்பும், பின்பும் கவனமாக வாசித்து சிந்திக்கும்போது அதன் அர்த்தம் தெரிகிறது. எடுத்துக்காட்டாக ஆதி.28:16-19 வாசிக்கும்போது வசனம் 19-ல் ஸ்தலத்திற்கு "பெத்தேல்" என்பது தவறு "பெத்யேல்" தான் சரியானது. இதன் பொருள் தெரிய வேண்டுமானால் வசனம் 17-ல் இது தேவனுடைய வீடேயல்லாமல் வேறல்ல (பெத்-வீடு, யேல் என்றால் தேவன் தேவனுடைய வீடு ஆகும்) வசனம் 19-ல் அதற்கு முன்னே அவ்வூருக்கு லூஸ். ஒளி ஆகும் வசனம் 22-ல் ... இந்தக் கல் தேவனுக்கு வீடாகும் நமது வீட்டிற்கு "பெத்தேல்" என்று பெயரிடாமல் "பெத்யேல்" என்று பெயரிட்டு மகிழுங்கள். ஏனெனில் வீடுக்குள் தேள் இருக்க வேண்டாம்.

லஸ், லூஸ், லூசியானா, லூசிபர், லூசியஸ் இவைக்கு பொருள் வெளிச்சமாகும். கீழேயுள்ள வார்த்தைகளுக்கு பொருள் அறிந்தோமானால் வேதாகமத்தை எளிதில் அறிந்து தெளிவு பெறலாம்.

1. Haron - Enlightend ஞான ஒளியானவன் லேவி கோத்திரத்தோன் மிரியாம், மோசேயின் சகோதரன் முதல் பிரதான ஆசாரியன்.

2. Abel - Breath மூச்சு ஆதாம், ஏவாளின் இரண்டாவது மகன். தேவனுக்கு கீழ்ப்படிந்து தேவனுக்கு மேன்மையான பலி செலுத்தி தன் அண்ணன் காயீனால் கொலை செய்யப்பட்டவன். மரித்தும் இன்றும் பேசுகிறவன் (எபி.11:4).

3. Abraham - (Father of Multitude) ஆதி.12:1 மக்களின் புறஜாதியினர், யூதர், கிறிஸ்தவர், முகமதியார்களின் தந்தை / விசுவாசிகளின் தந்தை. இவருக்கு சாராள் எகிப்து தேசத்து அடிமைப்பெண்ணாகிய ஆகார், ஆதி.16:3 கேத்தூராள் (ஆதி.25:1).

4. Adam - (Ruddy, Earth) செந்நிலம் / செஞ் நிறம் தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட முதல் மனிதன். பாவம் செய்ததினால் ஏதேனிலிருந்து துரத்தப்படும் முன்பு தோலாடை உடுத்தியும் பாதுகாப்பாய் குடியிருக்க அவனுக்கு தேவன் வீடு அமைத்துக்கொடுத்தார் (ஆதி.4:7).

5. Amram - Exaltedpeople உயர்த்தப்பட்டவன் லேவி கோத்திரத்தான். தன் அத்தையை மணமுடித்தான் (யேகெபெத்து) அவர் ஆரோன், மிரியாம், மோசேயை பெற்றார். யாத்.6:20. சொந்தத்தில் மனம் புரிவது தவறு என்று (4500 ஆண்டுகளுக்கு முன்னதாகவே) கட்டளையிடப்பட்டது. 20-ம் நூற்றாண்டின் இறுதியில் தான் இதனை மருத்துவ உலகம் ஏற்றுக்கொண்டது.

6. Anakim - Giant தென் கானானில் வாழ்ந்த அரக்கன், பேராற்றல் உள்ளவன் (யோசுவா 14:12).

7. Andrew -Manly ஆண் மகன் யோவான்1:44 அப்போஸ்தலர் பேதுருவின் தம்பி பெத்சாயிதா ஊரில் பிறந்தவர் 5000 பேருக்கு உணவளிக்கப்பட்டு ஒரு ஏழை சிறுவனிடமிருந்து 5 அப்பம் 2 மீன்களை இயேசுகிறிஸ்துவிடம்



இன்றைக்கு இளமையில் இருக்கும் பிள்ளைகள் இவ்வசனத்தை உற்றுநோக்கி, ஒருவனும் அசட்டைபண்ண இடங்கொடாதபடி வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும் மாதிரியாக ஜீவிக்க கற்றுக்கொள்ள வேண்டும். இளைய சமுதாயத்தை நம்பி நாடு இருக்கிறது. இளமைபிராயம். பெலவீனங்களை கொண்டுவரும் வயது. அதேவேளையில் சாதிக்க துடிக்கும் வயதும் இதுவே. ஆகையால் எல்லாவகையிலும் மாதிரியாக செயல்பட்டு கிறிஸ்துவின் நாமத்தை மகிமைப்படுத்த வேண்டும். பெற்றோர்களுக்கு நற்பெயர். பணத்தாலோ, பொருளாலோ, கொடுக்கமுடியாது. சத்தியத்தின்படி நடப்பதாலே கொடுக்கமுடியும். யோவான் பிரியமான அம்மாளுக்கு எழுதும்போது; "பிதாவினால் நாம் பெற்ற கற்பனையின்படியே உம்முடைய பிள்ளைகளில் சிலர் சத்தியத்திலே நடக்கிறதை நான் கண்டு மிகவும் சந்தோஷப்பட்டேன்" என்கிறார் (2யோவா.4). இன்றைக்கு சந்தோஷம் பொதுவாக பலவழிகளில் வருகிறது. ஆயிரம் தவறு செய்தவளாக இருந்தாலும் அவன் ஒரு குழந்தையைப் பெற்றாள் சந்தோஷம். எப்படியாவது பாஸ் பண்ணிவிட்டால் சந்தோஷம். எப்படியாவது நாலு காசு சம்பாதித்தால் சந்தோஷம். எங்கிருந்தாவது பொருட்களை கொண்டுவந்தால் சந்தோஷம். ஆனால் அப்போஸ்தலனாகிய யோவான். உம்முடைய பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறதை நான் கண்டு மிகவும் சந்தோஷப்பட்டேன் என்கிறார். இயேசுகிறிஸ்துவின் வசனமே சத்தியம். இந்த சத்தியத்திலே அவர்கள் நடந்திருக்கிறார்கள். அதை அவர் கண்ணார கண்டு இருக்கிறார். இதுவே மெய்யான சந்தோஷம் உண்மையான சந்தோஷம். இதையே பிதாவாகிய தேவன் விரும்புகிறார். யோவானும் அந்த அம்மாளும் எந்த கற்பனையின்படி நடக்கிறார்களோ அந்த கற்பனையின்படியே நடக்கக்கூடிய பிள்ளைகளைப் பார்த்து சந்தோஷம் அடைகிறார்கள். சந்தோஷம் எந்தவகையில் வந்தால் என்ன? எல்லாம் சந்தோஷம் தானே என்று நினைக்கக்கூடாது. மெய்யான சந்தோஷம் சத்தியத்திலிருந்து வரவேண்டும். அதுவே மெய்யான சந்தோஷம். தவறிலிருந்து வரும் சந்தோஷம் பின்பு மறக்கமுடியாத வேதனையை கொண்டுவரும்.

பெற்றோருக்கான சில காரியங்களை பவுல் குறிப்பிடுகிறார். "பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக" என்கிறார் (எபே.5:4). பிள்ளைகளை வளர்க்கவேண்டிய பொறுப்பு பெற்றோர்களுக்கு உண்டு. எனக்கெல்லாம் ஒன்றும் தெரியாது அது அவன்பாடு என்று பெற்றோர் ஒதுங்கக்கூடாது. அவர்களைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் வளர்க்கவேண்டும். கர்த்தருக்கேற்ற போதனை என்று சொல்லும்போது, ஞாயிறு பாடசாலைக்கு அனுப்பிவிட்டால் மட்டும்போதாது. பொதுவாக டியூசன் அனுப்புவதைப்போல ஞாயிறு பாடசாலைக்கும் அனுப்பி வைக்கிறார்கள். நீங்களே அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கவேண்டும். எப்படியென்றால் இது குறித்து உபாகம புத்தகத்தில் படிக்கிறோம். "நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிற போதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிற போதும் அவைகளைக்குறித்துப்பேசி" என்று படிக்கிறோம் (உபா.6:7). எல்லா சமயங்களிலும் வேதத்தை குறித்து பேசவேண்டும். ஒவ்வொரு நாளும் எவ்வளவோ மணித்துளிகளை நாம் வீணாக்குகிறோம். நீங்கள் என்றாவது சிந்தித்ததுண்டா? நீங்கள் உங்கள் வீட்டில் உட்கார்ந்திருக்கும்போது இவைகளைக்குறித்துப் பேசியதுண்டா? அந்தப்படியே நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கும்போதும் பேசவேண்டும். அப்பொழுது நான்கு வேளையும் சொல்லிக்கொடுக்கும் போதனை அவர்களுடைய மனதில் நிறைந்து காணப்படும். அப்பொழுது அவர்களை எந்தவிதமான தீயபழக்கங்களும் பற்றிக்கொள்ளமுடியாது. எதிர்காலத்தில் உங்களுக்கு அழகாரமான முடியாயிருப்பார்கள். இதை ஒவ்வொரு நாளும் செய்ய மறவாதிருங்கள். உங்களுடைய குடும்ப நன்மைக்காகவே இதைச் சொல்லுகிறோம்.

அந்தப்படியாக பிள்ளைகளுக்கு சாலொமோன் எழுதும்போது; "பிள்ளைகளே, நீங்கள் தகப்பன் போதகத்தைக் கேட்டு, புத்தியை அடையும்படி கவனியுங்கள்" என்று எழுதுகிறார் (நீதி.4:1). ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் அவர்களுடைய தகப்பன் போதகம் மிகவும் முக்கியமானதே. உங்களை பள்ளியில் சேர்ப்பவர்கள் அவர்கள்தான். அவர்கள் அந்நாட்களில் பள்ளிக்கு அனுப்பாமல் வேறே இடத்திற்கு உங்களை அனுப்பியிருந்தால் உங்களுடைய நிலைமை எப்படியிருந்திருக்கும்? என்பதை சற்று சிந்தித்துப்பாருங்கள். அவர்கள் நலமான காரியத்தை உங்களுக்கு போதனையாக கொடுத்திருக்கிறார்கள். ஆகையால் நீங்கள் தகப்பனுடைய போதனையை அசட்டைபண்ணாதிருந்து, கர்த்தருக்குள்ளாக ஒரு புதிய மனிதனாக பிறக்க முயற்சியுங்கள். ஏனெனில் "தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" (1யோவா.5:4). நீங்கள் கர்த்தருடைய பிள்ளைகளாக இருந்து கொண்டு உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படிந்துகொண்டு உலகத்தை ஜெயிக்கும் பிள்ளைகளாக வளருங்கள்.

**உலகத்தை ஒரு சாதாரண மனிதன் ஜெயிக்க முடியுமா?**

உலகத்தில் எத்தனையோ விளையாட்டுகள் இருக்கிறது. இவைகளில் மனிதர்கள் விளையாடி ஜெயித்துவிடுகிறார்கள். ஆம், அது அவர்களால் முடியும். ஆனால் உலகத்தை ஜெயிக்க ஒரு சாதாரண மனிதனால் முடியாது என்றே வேதம் சொல்லுகிறது. "இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்?" (1யோவா.5:5). இயேசுவை விசுவாசிக்காதவன், அவரை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிடாதவன் இந்த உலகத்தையும் அதின் காரியங்களையும் ஜெயிக்க முடியாது. இந்த உலகத்தையும், அதில் பிசாசு கொண்டுவந்த அனைத்து சோதனைகளையும் சிலுவையில் ஜெயித்து வெற்றிகொண்டவர் இயேசு ஒருவரே. அவரை விசுவாசிக்கிறவன். அவரைப்போல இந்த உலகத்தையும், அதின் காரியங்களையும் வெற்றிகொள்ளமுடியும். நீங்கள் இயேசுவை விசுவாசிக்கும் ஒரு விசுவாசமுள்ள ஜெப வீரனாயிருக்கிறாயா? அப்படியானால் நீங்கள் உலகத்தை ஜெயிக்க முடியும். நீங்கள் உலகத்தில் உள்ள அனைத்து ஆசீர்வாதங்களை பெற்றவராயிருக்கலாம். உலக கல்வி, பணம், பலம், பெற்றவராயிருக்கலாம். ஆனால் இயேசு உங்களுடைய வாழ்க்கையில் இல்லையென்றால் நீங்கள் இந்த உலகத்தை ஜெயிக்க முடியாது. நீங்கள் இயேசுவோடு வாழும்போது உலகத்தை ஜெயிப்பீர்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**ஜெபியுங்கள்**

- இம்மாதம் நடைபெறவுள்ள பெண்களுக்கான சிறப்புக் கூட்டங்களுக்காக...
- கர்த்தருடைய சபையின் வளர்ச்சிக்காக...
- விசுவாசிகள் உண்மையோடு உத்தமத்தோடும் கர்த்தருக்காக ஜீவிக்க...
- வேதாகம பள்ளி ஊழியங்களுக்காக...
- நமது மாத இதழ் வாசகர்களுக்காக, அவர்களுடைய குடும்பங்களுக்காக...

**கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் வேலை செய்ய சுவிசேஷகர்கள் (வாலிபர்கள்) தேவை. உணவும், உடையும், மற்றும் உறைவிடமும் கொடுக்கப்படும்.**

**இயேசு சொல்கிறார்:**

**“ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்” யோவான்12:26.தொடர்புக்கு :94435 58041**



JOIN OUR WORLD EVANGELISM BIBLE SCHOOL RIGHT NOW
Contact: 94435 58041




2. தேவனுடைய கிருபையினாலே நாம் புதிய சிருஷ்டியாக்கப்பட்டோம். நாம் ஏதோ ஒரு புதிய நிலை உண்டாவதுபோல் மாறவில்லை. நாம் புதிய மனிதராகிறோம். இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின (2கொரி.5:17).

3. தேவனுடைய வேலைப்பாடாயிருக்கிற நம் வாழ்வில் தேவனுடைய நன்மை, வல்லமை, மகிமை மற்றும் கனம் யாவும் பிரதிபலிக்கிறது.

நம்மை, தங்கள் பெற்றோர்களாய் நம் பிள்ளைகள் பிரதிபலிக்கின்றன. நாம் கீழ்ப்படிதலுள்ள மரியாதையுள்ள, கடினமாக முயற்சிக்கிற பிள்ளையைப் பார்க்கும்போது அவனையோ அவளையோ நல்ல பெற்றோர்கள் வளர்த்திருக்கிறார்கள் என்று சொல்லுகிறோம். அதை போல அந்த பிள்ளை அடங்காததும், மதிக்கத் தெரியாததும் சோம்பேறியுமான குழந்தையாயிருந்தால் தன் பெற்றோர்கள் தன்னை நன்கு வளர்க்கவில்லை என்பதைப் பிரதிபலிப்பார்.

தேவனுக்கு நாம் எந்த விதமான பிரதிபலிப்பைக் கொடுக்கின்றோம்? மற்றவர்களைப்போல கிறிஸ்தவர்கள் தூய்மையற்று வாழ்ந்தால் அது பயங்கரமான ஒரு பிரதிபலிப்பு. கடவுளையும் மற்றவர்களையும் நேசிக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு மற்றவர்கள் நலனில் சற்றும் அக்கறை காட்டாமல் இருப்பது பயங்கரமான காரியம் தேவனுடைய இரட்சிப்புக்கு நன்றியோடிருக்கிறேன் என்று சொல்லும் ஒருவர் சக கிறிஸ்தவர்களோடு ஐக்கியமாய் சேர்ந்து தொழுதுகொள்ளவும் துதிக்கவும் கூடியவராயிருப்பது தேவனுடைய நன்மைகள் மற்றும் இரக்கத்தைப் பெற்றிருக்கிறேன் என்று சொல்லும் ஒருவர் தேவன் மீது பிரதிபலிக்கும் ஒன்றாகும்.

4. இரட்சிப்புக்கு முன்போ அல்லது பின்போ பெருமை பாராட்ட இடமில்லை. அப்படியே நீங்களும் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவற்றையும் செய்த பின்பு, நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரார் செய்யவேண்டிய கடமையை மாத்திரம் செய்தோம் என்று சொல்லுங்கள் என்றார் (லூக்.17:10).

**நிறைவாக**

1. தேவ கிருபை எல்லா மனிதருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

2. இந்தக் கிருபை வெளியேயும் பெறப்பட முடியும். தேவனுடைய கிருபையை நீங்கள் விருதாவாய்ப் பெறாதபடிக்கு உடன் வேலையாட்களாகிய நாங்கள் உங்களுக்கு புத்தி சொல்லுகிறோம் (2கொரி.6:1).


**நடப்புச் செய்திகள்**

- நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் தொடர்பாக மத்திய அரசிடம் இருக்கும் மேலும் 25 ரகசிய ஆவணங்களை வெளியிட இருப்பதாக மத்திய கலாச்சாரத் துறை அமைச்சர் மகேஷ் சர்மா தெரிவித்துள்ளார்.
- இளம் பெண்களைக் கட்டாயப்படுத்தி தேவதாசிகளாக ஈடுபடுத்தும் முறைகளை ஒழிப்பதற்கு மத்திய அரசின் நெறிமுறைகளை அனைத்து மாநிலங்களும் பின்பற்ற வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.
- சியாச்சின் பனிச்சரிவில் சிக்கி உயிரிழந்த 10 ராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு நல உதவிகள் அளிக்கப்படும் என்று, மத்திய ரசாயனத்துறை அமைச்சர் அனந்தகுமார் தெரிவித்தார்.
- நடிகர் ஜெய்சங்கரின் மகன் விஜயசங்கர் 28,000 கண் அறுவை சிகிச்சைகளை இதுவரை செய்துள்ளார்.
- அசாம் மாநிலம் கௌகாத்தியில் தெற்காசிய விளையாட்டுப்போட்டிகள் சிறப்பாக நடைபெற்றது.

## பாடம் -17 கிருபையினால் வரும் இரட்சிப்பு

### Salvation By Grace

*- Jerry Bates*




- சென்ற மாத இதழின் தொடாச்சி

தேவனுடைய கிருபையை சொந்தமாக்கிக் கொள்ள மனிதன் எப்பொழுதுமே செயலாற்ற வேண்டியிருந்தது.

1. கீழ்ப்படியும்போது விசுவாசம் இரட்சிக்கிறது. விசுவாசத்தினாலே எரிகோ பட்டணத்து மதில்கள் ஏழுநாள் சுற்றி வரப்பட்டு விழுந்தது (எபி.11:30).

2. பேதுரு சொன்னார். உங்களை நீங்களே இரட்சித்துக்கொள்ளுங்கள் (அப்.2:40).

3.பவுல் சொன்னார். உங்கள் இரட்சிப்பு நிறைவேற பயத்தோடும் நடுக்கத்தோடும் பிரயாசப்படுங்கள் என்று (பிலி.2:12).

4. நோவா, ஆனால் நோவா தேவனுடைய கண்களிலே இரக்கம் பெற்றார் (ஆதி.6:8). விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக் குறித்து தேவ எச்சரிப்புப் பெற்று பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்கு பேழையை உண்டு பண்ணினான். அதினாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளானதென்று தீர்த்து விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்திரவாளியானான் (எபி.11:7). நோவா கிருபையினாலும் விசுவாசத்தினாலும் கீழ்ப்படிதலினாலும் இரட்சிக்கப்பட்டான். இன்று தேவ கிருபை இவ்விதமாகவே செயல்படுகிறது.

5. தேவனுக்கு கீழ்ப்படிகிற இடத்தில் நம்முடைய கிரியையை எடுத்துக் கொள்வது கிருபையினாலும் விசுவாசத்தினாலும் கிடைக்கும் தேவனுடைய திட்டத்தை மீறுவதாகும். இந்த விதமான செயல், தேவனுடைய கிருபையினாலே வரும் இரட்சிப்பைப் பெறும் திட்டத்தை மாற்றுகிறது என்று சிலர் சொல்கின்றனர்.

1. ஒரு காரியத்துக்கு ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்களுண்டு. உதாரணம் ஜன்னலைப் பற்றிய விளக்கம். சன்னல் வழியாய் வருகிறது ஆனால் சன்னல் வெளிச்சம் தருகிறதா? கிரியைகளுக்கு ஏதாவது இடமிருக்கிறதா? நிச்சயமாக இருக்கிறது?

**நற்கிரியைகளிலே நாம் நடக்கவேண்டும்.**

1. நடக்க வேண்டும் என்று குறிப்பிடுவது நாம் தொடர்ந்து அப்படி செயல்பட வேண்டுமென்பதாகும். அப்படியாக நற்செயல்கள் கிருபையை பயனற்றதாக்காது. நாம் தொடர்ந்து தேவ கிருபையில் நிலைத்திருப்பதால் அவைகளிலே நடக்கிறோம் (அப்.13:43).

2. நாம் பொல்லாத வாழ்க்கை வாழ்வதில்லை. நாம் நற்கிரியைகளைச் செய்யும்படிக்கு புதிதாக சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். தேவனே நம்முடைய நற்கிரியைக்கும் இரட்சிப்புக்கும் காரணமாக இருக்கிறார்.

3. நாம் கிரியையினாலே இரட்சிக்கப்படவில்லை முன்னமே இரட்சிக்கப்பட்டபடியால் கிரியை செய்கிறோம்.

**நாம் தேவனுடைய வேலைப்பாடாயிருக்கிறோம் (2:10)**

1. வேலைப்பாடு என்றால் செய்யப்பட்ட ஏதோ ஒன்று. நாம் புதிய ஜீவனாயிருக்கிறோம் (யோவா.3:3-5).



## கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள்

-A.Prabhakaran



கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே இன்றேய நாட்களில் அநேக இடங்களிலே கிறிஸ்துவ போதனை கூட்டங்களும் சபைகளும் பெருகி வருகின்றன... இவை நல்லதுதான். ஆனால் அங்கே நடப்பது என்னவென்றால், ஆட்டம் போட்டு, கூச்சலிட்டு பாடுகிறார்கள். பயா், பயா், என்றதும் கீழே விழுகின்றனர்... தங்களுக்கே தெரியாத பாஷைகளைப் பேசுகின்றனர் இதை அந்நிய பாஷை என்கிறார்கள். இப்படிப்பட்ட கூட்டங்களும் சபைகளும் ஏராளம், ஏராளம்!

நாம் தெளிந்த புத்தியுள்ளவர்களாக இருந்து வேதத்திலே எழுதி இருப்பதை ஆராய்ந்து பார்த்து அதை கடைபிடிக்க வேண்டும். அதற்கு நாம் சரியான சத்தியத்தைப்போதிக்கும் சபைக்கு செல்லவும், வசனத்தை கடைபிடித்து பேசக்கூடிய தொலைக்காட்சி, ரேடியோ இவைகளில் வெளிவரும் கருத்து மற்றும் இலக்கிய இதழ்கள், கைபிரதிகள் படிக்கவேண்டியது அவசியம். ஏனெனில் பலவிதமான அந்நிய போதனைகளால் அலைப்புண்டு திரியாதிருங்கள் என்றும் (எபி.13:9) எபேசியருக்கு பவுல் "நாம் இனிக் குழந்தைகளாயிராமல் மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதுக்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகள் போல அலைகிறவர்களாயிராமல் இருங்கள் என எழுதுகிறார். ஆம், சகோதரனே, சகோதரியே நாம் இளம் வயதில் அதாவது குழந்தை பருவத்திலே மணலில் வீடு கட்டி விளையாடியிருப்போம். பெரியோர்கள் இதை ரசிப்பார்கள். நாம் வளர்ந்து பெரியவர்கள் ஆன பிறகு மணலில் வீடு கட்டினால் யாரும் ரசிக்கமாட்டார்கள். நம்மை குறித்து என்ன சொல்லுவார்கள் நீங்களே அசைப்போட்டுப் பாருங்கள்!

இயேசுவும் பரிசேயர், சதுசேயர் என்பவர்களின் புளித்த மாவுக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்றார். புளித்தமாவு என்பது அவர்களுடைய உபதேசம், அதாவது இன்றைய நாட்களில் அநேக இருதயத்தை கெடுத்துக் கொண்டு இருக்கும் அந்நிய போதனைகளும், அந்நிய சபைகளுமே. ஆம், துர் உபதேசங்கள் போதிக்கப்பட்டால் நாமும் நல்லதை விட்டு துர் சிந்தையுள்ளவராகவே இருப்போம் என பவுல் 2கொரி.2:17-ல் குறிப்பிட்டுள்ளார். அநேகரைப்போல நாங்கள் தேவ வசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல் துப்புரவாகவும் தேவனால் அருளப்பட்ட பிரகாரமாகவும் கிறிஸ்துவுக்குள் தேவ சந்நிதியில் பேசுகிறோம் என்கிறார். ஆம் சகோதர, சகோதரிகளே இப்போது மட்டுமல்ல, இயேசுகிறிஸ்துவின் காலத்திலும் ஆதி அப்போஸ்தலரின் காலத்திலும் கூட அநேக அந்நிய போதனைகள் இருந்தன. நாம் மிகவும் ஜாக்கிரதையாக ஜீவியத்தைப் பாதுகாத்துக்கொள்ளவோண்டும்.

சில சபைகளிலே குழந்தை ஞானஸ்நானம், தெளித்தல், இயேசுவின் நாமத்தில் மட்டும் என போதிக்கிறார்கள். ஆனால் பரிசுத்த வேதாகமத்தில் கூறுவது என்ன? வயது வந்த பின்பு தேவனை விசுவாசித்து (மாற்.16:16) அன்பினாலே, மனந்திரும்பி (அப்.2:38) பாவ மன்னிப்புக்காக இயேசுவை விசுவாசித்து அறிக்கையிட்டு (மத்.3:6) ஞானஸ்நானம் பெறவேண்டும். Baptizo என்றால் முழுகுதல். இயேசுவின் நாமத்தில் அல்ல. பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் பெறவேண்டும் இது இயேசுவின் கட்டளையாக இருக்கிறது (மத்.28:19). ஆதலால் சகோதர, சகோதரிகளே பல விதமான அந்நிய போதனைகளால் அலைப்புண்டு திரியாமல் கிறிஸ்துவின் சபையாரோடு தேவனை தொழுதுகொள்ளுங்கள். அந்த சபையில் கொடுக்கப்படும் வேதாகமத்தின் உபதேசத்தின் படி கீழ்ப்படிந்து சாட்சியுள்ளவர்களாக வாழுங்கள்.



# நாம் எப்படி ஜெபிக்கவேண்டும்?

## How Should We Pray?

*J.C.Choate*

**கி**றிஸ்தவர்கள் தங்களுடைய பிதாவாகிய தேவனைக் கிட்டிச்சேர்வதற்கு ஜெபமே வழியாக இருக்கிறது. இதற்கான இன்னொரு வழி, இது நாம் தேவனிடத்தில் பேசுகின்ற முறையாகவும் இருக்கிறது. ஆனால் நாம் அதை எவ்வாறு நடைமுறைப் படுத்துகிறோம்? எவ்வழியில் நாம் நமது சிருஷ்டிகரை கிட்டிச் சேருகிறோம்?

நாம் தேவனுடைய பிரசன்னத்திற்குள் மரியாதை செலுத்தாமல், தாழ்மையில்லாமல், ஆராதிக்கும் ஒரு மனநிலையில்லாமல் எவ்வாறு நுழைகிறோம்? கிறிஸ்து, “தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ளவேண்டும் என்றார்” (யோவா.4:24).

எப்படி ஜெபிக்கவேண்டும் மேலும் எப்படி ஜெபிக்கக் கூடாது என்பதை கிறிஸ்து நமக்குக் கூறுகிறார். அவர் அன்றியும் நீ ஜெபம் பண்ணும்போது மாயக்காரரைப் போலிருக்க வேண்டாம்; மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ ஜெபம் பண்ணும்போது, உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு, அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார். அன்றியும் நீங்கள் ஜெபம் பண்ணும்போது, அஞ்ஞானிகளைப்போல வீண்வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்; அவர்கள், அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள். அவர்களைப்போல நீங்கள் செய்யாதிருங்கள்; உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்” (மத்.6:5-8) என்றார்.

கர்த்தர் தொடர்ந்து சீஷர்கள் எவ்வாறு ஜெபிக்க வேண்டுமென சொல்கிறார். அவர் மாதிரி ஜெபத்தில் பேசின வார்த்தைகளும் சீஷர்களுக்கு எவ்வாறு ஜெபிக்க வேண்டுமென கற்பித்ததும் கர்த்தருடைய சொந்த ஜெபமாகவே இருக்கின்றது. இருந்தாலும் இன்றும் தேவனோடு நாம் எப்படி பேச வேண்டும் என நாம் அவற்றின் முக்கியக் குறிப்புகளிலிருந்து அறிகிறோம். கிறிஸ்து, “நீங்கள் ஜெபம் பண்ணவேண்டிய விதமாவது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக;



### வேத அறிவுப்போட்டி எண் 184 ல் வெற்றிபெற்றவர்கள்

| | |
|---|---|
| B.ஸ்டெல்லாம்மா | - கூத்தூர் |
| T.ஜாய்மேரி | - திண்டுக்கல் |
| Mrs.லிங்காஜீவரத்னம் | - சிவகாசி |
| S.தங்கம் | - கன்னியாகுமரி |
| T.ஏஞ்சலின் நேசமலர் | - மதுரை |
| S.கமலீஸ்வரன் | - பாண்டமங்கலம் |
| S.தர்ஷினி | - பாண்டமங்கலம் |
| S.A.சாமுவேல் | - மரவபாளையம் |
| Sis.அல்லிராணிகாட்வின் | - சென்னை |
| R.சிவா | - பேனலூர்பேட் |
| K.மோகன் | - குமாரபாளையம் |
| J.ஆஷா ஹெலன் | - தூத்துக்குடி |
| R.கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| M.ராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| S.லதாசூரியமூர்த்தி | - தேனி |
| D.சாந்தாதேவி | - தேனி |
| D.டேவிட் | - சென்னை |
| T.ஜெசுராஜா | - சென்னை |
| N.விஜயநானந் | - ஓலப்பாளையம் |
| Tmt.மரகதம் திரவியம் | - கோம்பை |
| A.டேவிட்ஜெயச்சந்திரன் | - மதுரை |
| Sis.தேவிராஜசிங் | - திருப்பூர் |
| A.ரெபேக்காள் | - மதுரை |
| K.M.சாந்தி | - வாடிப்பட்டி |
| Mrs.ருக்மணிஜெயசீலன் | - தேனி |
| Mrs.ஜெபசீலி ஜெயக்கொடி | - திருச்சி |
| Mrs.சாந்தா பழநி | - தர்மபுரி |
| S.R.பெரியசாமி | - நாமக்கல் |
| A.சரோஜா | - திருச்சி |
| A.ஜெயந்தி | - நாமக்கல் |
| M.கோபி | - கே.வி.குப்பம் |
| T.ராஜாத்தி | - கோம்பை |
| K.ஜெகநாதன் | - நாமக்கல் |
| K.V.ராஜா | - கோதமங்கலம் |

### வேத அறிவுப்போட்டி எண் 184 ன் விடைகள்

| | |
|---|---|
| 1.அகாஸ்வேரு | - எஸ்த.2:17 |
| 2.இரட்சிப்படைவோம் | - 2தெச.2:13 |
| 3.மேகம் | - யோபு 26:8 |
| 4.தீமோத்தேயுவுக்கு | - 1தீமோ.1:15 |
| 5.குற்றவாளியாவார்கள் | - சங்.25:21 |
| 6.ஆம் | - 2தீமோ.4:11 |
| 7.துன்மார்க்கன் | - நீதி.11:7 |
| 8.ஆம் | - தீத்.3:1 |
| 9.விதைக்க | - பிர.11:4 |
| 10.செய்யாதே | - எபி.10:4 |

### வாசகர் கடிதம்...

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதரர் அவர்களுக்கு இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஸ்தோத்திரக்கிறேன். தங்களது மாத இதழ் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" பத்திரிக்கையை கண்டேன். மிகவும் பயனுள்ள செய்திகள் இருந்தது மேலும் அப்பத்திரிக்கையின் மாதம் மாதம் பிரதிகளை எனக்கு கிடைக்க நான் என்ன செய்யவேண்டும் என்பதையும் மாத இதழையும் அனுப்புமாறு தங்களை கிறிஸ்துவின் அன்பில் கேட்டுக்கொள்கிறோன்.

இப்படிக்கு,
K.Natarajan

மாத இதழ் தேவைக்கு
உங்கள் முகவரியை இந்த மொபைல்
எண்ணுக்கு SMS அனுப்பவும்
94435 58041

### வேத அறிவுப்போட்டி எண் 185 ல் வெற்றிபெற்றவர்கள்

| | |
|---|---|
| Mrs.இராஜம்மாள் | - திருப்பூர் |
| J.ஆஷா ஹெலன் | - தூத்துக்குடி |
| K.விஜயா | - வாடிப்பட்டி |
| T.ராஜாத்தி | - கோம்பை |
| K.மோகன் | - குமாரபாளையம் |
| S.தங்கம் | - கன்னியாகுமரி |
| S.R.பெரியசாமி | - நாமக்கல் |
| Sis.அல்லிராணிகாட்வின் | - சென்னை |
| Mrs.சாந்தா பழநி | - தர்மபுரி |
| R.கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| M.ராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| Mrs.ஜெபசீலி ஜெயக்கொடி | - திருச்சி |
| T.ஏஞ்சலின் நேசமலர் | - கன்னியாகுமரி |
| A.ரெபேக்காள் | - மதுரை |
| A.டேவிட்ஜெயச்சந்திரன் | - மதுரை |
| Sis.தேவிராஜசிங் | - திருப்பூர் |
| Tmt.மரகதம் திரவியம் | - கோம்பை |
| K.S.மாணிக்கவாசகம் | - திருச்சி |

### வேத அறிவுப்போட்டி எண் 185 ன் விடைகள்

| | |
|---|---|
| 1.ஓடிப்போவீர்கள் | - ஏசா.30:17 |
| 2.பாக்கியவான்கள் | - யாக்.1:12 |
| 3.நுனித்தோல் | - ஏரே.4:4:11 |
| 4.தேவனுக்கு | - 1பேது.2:16 |
| 5.காணாமற்போகிறார்கள் | - எசே.12:2 |
| 6.பேதுரு | - 1பேது.1:13 |
| 7.தானியேல் | - தானி. 4:8,9 |
| 8.யோவான் | - 1யோ.2:13,14 |
| 9.இஸ்ரவேல் புத்திரரின் | - ஓசி.1:10 |
| 10.யோவான் | - 2யோவா.1 |

மனந்திரும்பவேண்டியது அவசியமாயிருந்ததென்றால் புறஜாதியாராகிய நமக்கு அது எவ்வளவு அவசியம்! எனவே ''மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்'' ஏற்கனவே நான் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டேன் என்பீர்களானால் உங்களை நீங்களே வஞ்சித்துக் கொள்ளுகிறவர்களாயிருப்பீர்கள். தேவனுடைய சித்தத்தின்படி முதலாவது கர்த்தராகிய இயேசுவின் இரத்தம் நம்மை பாவமறகழுவ வல்லமை யுடையது என அறிந்து பாவத்திற்காக மனந்திரும்பி, பிறகு அப்பாவங்கள் மன்னிக்கப்படும்படிக்கு ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். இப்படிச் செய்யும் போது மட்டுமே நீங்கள் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்படுவீர்கள். பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட்டவர்களாயுமிருப்பீர்கள்.

அன்பு சகோதரிகளே, உலகில் ஒவ்வொரு நாளும் திடீர்திடீரென்று மாற்றங்கள் பல ஏற்பட்டுக் கொண்டேயிருக்கிறது. கடந்த சில ஆண்டுகளுக்குமுன் ஏற்பட்ட சுனாமி பேரழிவு உலகத்தையே உலுக்கி விட்டது. இந்த அழிவு இன்னும் நம்முடைய நினைவிலிருந்து நீங்காமல் உலுக்கிக் கொண்டிருக்கிறது. கொஞ்சங்குறைய இதைப்போன்ற சம்பவம் நோவா காலத்தில் ஏற்பட்டது. ''அப்போது இருந்த உலகம் ஜலப்பிரளயத்தினாலே அழிந்ததென்பதையும் மனதார அறியாமலிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வர்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவ பக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்து போகும் நாள் வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது. ......இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் **நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்!**'' (2பேது3:6-11) என வேதம் கூறுகிறது. அன்று நோவா தேவ சத்தத்திற்குக் கீழ்ப்படிந்தான், நோவாவின் மனைவி நோவாவுக்குக் கீழ்ப்படிந்தாள், அவனுடைய பிள்ளைகளும், மருமக்களும் கீழ்ப்படிந்தனர் ஆனபடியினால் காக்கப்பட்டனர்.

இதோ ''கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்'' (2பேது.3:10). நாமோ பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும் என வேதம் கூறுகிறது நாம்மட்டுமல்ல நம்முடைய கணவன், நம்முடைய பிள்ளைகள், நம் குடும்பத்தார் அனைவரும் இவ்விதமாய் நடக்கவேண்டும். நோவாவும் அவன் குடும்பமும் காக்கப்பட்டது போல் நாமும் நம்முடைய குடும்பமும் காக்கப்பட வேண்டும். உலகத்திலுள்ள அனைவரும் காக்கப்பட வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அவபக்தியுள்ளவர்களை கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூடக் **கர்த்தர் வருகிறார்** (யூதா15). கர்த்தரை சந்திக்க ஆயத்தப்படுவோம்.

நீ தேவனுக்கு ஒரு பொருத்தனை பண்ணிக்கொண்டால்,
அதைச் செலுத்தத் தாமதியாதே; அவர் மூடரில்
பிரியப்படுகிறதில்லை; நீ நேர்ந்துகொண்டதைச் செய்



உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத்தாரும். எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென், என்பதே''(மத்.6:9-13).

ஏன் இந்த ஜெபம் இயேசுவின் நாமத்தில் கேட்கப்படவில்லை? கிறிஸ்து மனிதனை இரட்சிக்கும்படிக்கு அவனுடைய பாவங்களுக்காக, (அந்த வேளையில்) இன்னும் மரிக்கவில்லை மேலும் நம்முடைய மத்தியஸ்தராக மாறவில்லை. ஆனபடியினால், இன்று நாம் இந்த மாதிரி ஜெபத்தில் இரண்டு மாற்றங்களை உருவாக்குகிறோம். நாம் கர்த்தருடைய ராஜ்யம் வளரவும் பரவவும் ஜெபிக்கிறோம், மேலும் பிதாவை நோக்கி நம்முடைய ஜெபத்தினை இயேசுவின் நாமத்தில் முடிக்கிறோம் (2கொரி.1:2).

ஜெபமானது பிதாவை நோக்கி ஏறெடுக்கப்பட்டுள்ளது என்பதை நாம் அறிவோம், முதலாவது, அங்கே தேவனுக்கு மகிமை செலுத்தப்பட்டது. பிறகு சபை அல்லது ராஜ்யத்தைக் குறித்து இயேசு வற்புறுத்திச் சொன்னார், மேலும் சீஷர்களுக்கு அது சீக்கிரமாக வரும்படிக்கு ஜெபிக்க கற்றுக்கொடுக்கின்றார்.

இரண்டாவதாக, அவர் சரீரம் மற்றும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காக ஜெபிக்கும் படி கற்றுக்கொடுத்தார்.

இயேசுவின் ஜெபத்தில் மூன்றாவது காரியம், மன்னிப்பைக் குறித்து...... நாம் தேவனுடைய மன்னிப்பைப்பெறவும், நமக்கு விரோதமாக குற்றஞ்செய்தவர்களை நாம் மன்னிக்க வேண்டுமென்பதையும் அறிவுறுத்தினார்.

நான்காவதாக, நாம் சோதனையிலிருந்தும் பாவத்திலிருந்தும் நீங்கும்படிக்கு தேவனுடைய உதவியைக் கோரவேண்டும் என கற்பிக்கப்படுகிறோம்.

ஐந்தாவதாக, தேவனை மகிமைப்படுத்துவதோடும், எல்லா வல்லமையும் மகிமையும் அவருடையவைகளே என அறிக்கையிடுவதோடும் இயேசு ஜெபத்தினை நிறைவு செய்கிறார்.

இந்த ஜெபம் ஒரு சுருக்கமான ஜெபமாகயிருந்தது ஆனால் இது நாம் ஜெபிக்கவேண்டிய அடிப்படை மற்றும் பொதுவான தலைப்புகள் அனைத்தையும் உள்ளடக்கிய ஜெபமாகும். இவைகள் நம்முடைய இருதயங்களிலிருந்து ஊற்றப்படும் அதிகமான தனிப்பட்ட மற்றும் குறிப்பிட்ட தேவைகளுக்காகவும், அவர் நம்மை போஷித்து உதவிசெய்வார் என பாவங்களை அறிக்கையிட்டு ஜெபிக்கிறதாகவும் இருக்கலாம்.

இங்கே தனி ஜெபங்களும் பொது ஜெபங்களும் உண்டு (லூக்.9:18, அப்.12:12) நாம் நிற்கின்ற இடத்தில் ஜெபிக்கின்ற ஜெபங்களும் (மாற்.11:25). நாம்

முழங்காலில் நிற்கின்ற இடத்தில் ஜெபிக்கின்ற ஜெபங்களும் (அப்9:40) இரவும் பகலும் தொடர்ந்து ஜெபிக்கின்ற ஜெபங்களும் (1தெச.3:10) உண்டு. நாம் இடைவிடாமல் ஜெபிக்கவும் அல்லது ஜெபசிந்தையோடு நாம் வாழவும் அறிவுறுத்தப்படுகிறோம் (1தெச.5:17).

நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? நீங்கள் ஜெபிக்கிறீர்களா? ஜெபத்தினைக் குறித்து உங்களுடைய கருத்து என்ன? நீங்கள், தேவன் உங்களை நேசிக்கிறார் உங்களுடைய ஜெபத்தினைக் கேட்கிறார் என்று நம்பி விசுவாசத்துடன் ஜெபிக்கிறீர்களா?

நம்முடைய பிதாவை ஜெபத்தின் மூலம் கிட்டிச்சேரும் பாக்கியம் பெற்றுள்ள நாம் எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்டவர்களாயிருக்கிறோம்! நாம் இவ்வாறு செய்து நம்முடைய ஜெபத்தின் முடிவில் எப்பேர்பட்ட வல்லமையைப் பெற்றுக்கொள்கிறோம்!


'ஒரே வழி' வேதபாடம் **The Master Course** படிக்க விரும்புகிறவர்கள் இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி, ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.

**Batlagundu Bible College, Post Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**


**பொது அறிவுச் சோதனை**

1. இந்தியாவின் முதல் பெண் ரெயில் ஓட்டுனர் யார்?
   அ)செல்வி.சுப்ரியா ஆ)செல்வி.சுலேகாராய் இ)செல்வி.சுரேகா யாதவ்
2. அதிக எழுத்துக்களை கொண்ட மொழி எது?
   அ)சுமேரிய மொழி ஆ)கம்போடிய மொழி இ)தமிழ் மொழி
3. எந்த நாட்டில் கோட்டைகள் அதிகம்?
   அ)செக்கோஸ்லோவாகியா ஆ)இந்தியா இ)எகிப்து
4. ஜப்பான் நாடு எத்தனை தீவுகளைக் கொண்டது?
   அ)3,900 தீவுகள் ஆ)3.000 தீவுகள் இ)4,008 தீவுகள்
5. அமெரிக்க ஐக்கிய நாட்டில் வசிக்கும் இந்தியர்களில் நீதிபதியாக பதவி ஏற்றமுதல் நபர் யார்?
   அ)ரதி தேசாய் ஆ)பி.ஏ.சங்மா இ)ஆர்.எஸ்.சர்காரியா

**விடைகள்:1)செல்வி.சுரேகா யாதவ் 2)கம்போடிய மொழி 3)செக்கோஸ்லோவாகியா 4)3,900 தீவுகள் 5)ஆர்.எஸ்.சர்காரியா**

**Bible Statistics**

| | |
|---|---|
| *Questions - 3,296* | *Shortest Chap. - Ps.117* |
| *Longest Name - Isa.8:1* | *Largest Book - Psalms* |
| *Longest Verse - Esther8:9* | *Smallest Book - 3John* |
| *Shortest Verse - Jon.11:35* | *Longest chap. - Ps.119* |
| *Middle Verse - Ps.118:8* | *Word GOD occurs 3,358 times* |





# கர்த்தர் வருகிறார்

**Maranatha**

*- J.Glory Arjunan*

கர்த்தர் வருகிறார் என்ற செய்தி உங்களுக்குக் களிப்பை உண்டாக் குகிறதா? அல்லது கலக்கத்தை உண்டாக்குகிறதா? எதுவாயிருந்தாலும் கர்த்தர் வருகிறார் என்பது நிச்சயம். ஆம், அவர் சீக்கிரமாய் வருகிறார் என வேதம் கூறுகிறது. ''பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்..''(1தீமோ.1:15). இவ்வாறாக பூமிக்கு வந்த கிறிஸ்து இயேசு நம்மை பாவத்திலிருந்து விடுவித்து காக்கும்படிக்கு சிலுவையிலே தம்முடைய இரத்தத்தை சிந்தி மரித்து, அடக்கம் செய்யப்பட்டு, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். உயிர்த்தெழுந்த கிறிஸ்து தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அப்போஸ்தலருக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார் (அப்.1:3). மட்டுமல்ல ''....அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில், உயர எடுத்துக் கொள்ளப்பட்டார், ....வெண்மையான வஸ்திரந்தரித் தவர்கள் இரண்டு பேர் அவர்களருகே நின்று: ..உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்''(அப்.1:9-11).

அன்பு சகோதரிகளே, இதைக்குறித்து இன்று அநேகர் பரியாசம் பண்ணுகின்றனர். சகலமும் சிருஷ்டிப்பின் தோற்றமுதல் இருந்தவிதமாயிருக் கிறதே என்று சொல்லுவார்கள். ''பிரியமானவர்களே, கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒரு நாள் போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டாம். தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தை குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்'' (2பேது.3:8,9). ஆம், நம்மை உண்டாக்கின நம்முடைய தேவன் நம்மை அதிகமாய் நேசிக்கிறார். நம்மைக் காக்கும்படிக்கு, வரவிருக்கும் அழிவிலிருந்து விடுவிக்கும்படிக்கு சித்தமுள்ளவரா யிருக்கிறார். எனவே தான் இங்கு ''ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்'' என ஆவியானவர் திருவுளம் பற்றுகிறார். அன்பு சகோதரியே, நீங்கள் மனந்திரும்பிவிட்டீர்களா? இல்லை, நாங்கள் ஏற்கனவே கிறிஸ்தவர்கள் தான், எங்களுடைய முன்னோர்கள் சபை போதகராகவும், உபதேசியாராகவும் இருந்தார்கள். அவர்கள் வழி வந்தவர்களாகிய நாங்கள் கிறிஸ்தவர்களாகவே இருக்கிறோம் என்று சொல்லி திருப்தியடைந்தவர்களாய் காணப்படுகிறீர்களா? பேதுரு, ''..நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொரு வரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்..''(அப்.2:38) என்று யாரைப்பார்த்து பிரசங்கித்தான்? யெகோவா தேவனை அறிந்திருந்த யூதரைப் பார்த்தல்லவா! அவர்களே,

எதிர்பாராத சந்திப்புகள் சில சித்திரங்களில் அடையாளப் படுத்தப்பட்டு வரையப்பட்டிருக்கின்றன. முன்பு அவைகளெல்லாம் தெய்வீக உலகில் வாசம் செய்கிறவர்களாக கருதப்பட்டிருதன, அவைகள் ஏறத்தாழ மனுஷ உலகத்தின் சரியான நகலாக கருதப்பட்டிருந்தன; அதில் ஒவ்வொரு தேவனுக்கும் தேவதைக்கும் ஒரு குறிப்பிட்ட வேலை ஒதுக்கப்பட்டிருந்தது. ஒருவர் காற்றுக்கு பொறுப்பான வராகவும், மற்றொருவர் ஜலத்துக்குப் பொறுப்பானவராகவும், மூன்றாம் நபர் பூமிக்கு பொறுப்பானவராகவும் இப்படியே சென்று கொண்டிருந்தது. அவகைளுக்கு மனுஷ உருவங்கள் கொடுக்கப்பட்டிருந்தது மாத்திரமல்ல அவர்கள் மனுஷரைப் போன்றே தாலந்து மற்றும் திறமை கொண்டவர்களாக வெளிப்படுத்தப் பட்டிருந்தார்கள் மேலும் அவர்கள் புத்திகூர்மை மற்றும் நன்மை மாத்திரம் அல்ல தீமையும் செய்யக் கூடியவர்களாகவும் வெளிப்படுத்தப் பட்டிருந்தார்கள்.

வேதாகமத்திலுள்ள தேவனை குறித்த சித்தரிப்போ - மனித இனத்தை குறித்த எந்த குறிப்போ - மனஷனுடைய சிருஷ்டிப்பின் காலம் தொடங்கி ஜலப்பிரளயத்தினால் ஏற்பட்ட அழிவு வரலாற்றுக்கு தொடர்புடையதாய் இருக்கிற, உண்மையாகவே வேதத்தில் எழுதியிருக்கிறகாரியங்களை குறிப்பிடுகிறவைகள் ஜனங்கள் மத்தியிலே அந்த காலத்திலும், ஸ்தலத்திலும் பரிசோதிக்க படாததாய் காணப்படுகிற இதிகாச கேடுபாட்டை எடுத்துப்போடுகின்றன. வேத வசனத்தில் இக்கருத்து மீண்டும், மீண்டும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. "....கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று" (எரே.1:2) இன்னும் 2தீமோ.3:16-ல் முழு விளக்கமும் கொடுக்கப்பட்டது: "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது..." என்று.

வேதாகம எழுத்தாளர்கள் தங்களுடைய வரலாற்று தகவல்கள் அல்லது தேவனை குறித்த தங்களுடைய கருத்து, அல்லது அவர்களுடைய செய்தி போன்றவைகளை தங்களை சூழ்ந்திருந்த பாரம்பரியங்கள் மற்றும் மார்க்கங்களிலிருந்து அவர்கள் எழுதவில்லை. மாறாக அவர்கள் தேவன் அவர்களுக்கு சொல்லும்படி கூறியது எதுவோ அதை மாத்திரம் அவர்கள் மிக உறுதியாக அறிவித்தார்கள். ஆகையால் வேதாகமானது பழங்கால நூல்கள் மத்தியிலும் கடவுளை குறித்த சித்தரிப்புகள் மத்தியிலும் தனித்தன்மை வாய்ந்ததாக உள்ளது. இது ஒட்டு மொத்தமான இதிகாச கேடுபாடுகளை விட்டு நீண்ட காலமாக அகன்று போன வரலாற்றையும் கூட உள்ளடக்கியதாக இருக்கிறது. விஞ்ஞான உண்மைக்கு தொடர்புடைய சொற்றொடர்கள், விஞ்ஞான உண்மைகள் அந்த நாட்களில் அறியப்படாமலும், உணரப்படாமலும் இருந்த போதிலும், வேதவாக்கியங்கள் எழுதப்பட்ட பொழுது விஞ்ஞானரீதியாக சரியாக எழுதப்பட்டிருந்தன.

உலகத்திலே இன்றைக்கு பல்வேறுபட்ட மனுஷனை மார்க்க சம்பந்தமான வகையில் வழிநடத்தக்கூடிய அநேக புத்தகங்கள் எழுதப்பட்டவைகளாக இருக்கின்றன. சிலர் இன்றைக்கு மனுஷனை பார்க்கிலும் பெரிதான ஒரு ஆவியினால் தாங்கள் ஏவப்படுகிறதாக உரிமை கொண்டாடுகிறார்கள். எல்லா மார்க்கங்களுமே மெய்யாகவே தாங்கள் இருப்பதற்கு தெய்வீகமான அதிகாரம் உடையவர்களாக இருப்பதாக உரிமை கொண்டாடுகிறார்கள், தாங்கட்ள போதிக்கிற உபதேசங்களுக்காக; ஏனென்றால் அவர்கள் சொல்லுகிற சட்ட திட்டங்களின் மனிதன் வாழ வேண்டும் என்று அவர்கள் போதிக்கிறார்கள். **-தொடரும்**



# உடன்படிக்கைகள் - COVENANTS

-Paula Bates



ஆதாமோடு உடன்படிக்கையை துவக்கின தேவன் காலகாலமாக மனிதர்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டிருக்கிறார். தேவன் என்னோடுகூட உடன்படிக்கை செய்திருக்கிறார் இது என்ன உடன்படிக்கை தேவன் எவ்வாறு மற்ற ஜனங்களோடு உடன்படிக்கை செய்திருக்கிறார் என புரிந்து கொள்ளும்படிக்கு நாம் பின்னோக்கிச் சென்று ஆராயவேண்டியது அவசியம்.

உடன்படிக்கை என்பது உறுதியாய் நிலைத்திருப்பதற்கு - நிலையற்றவனாயிருப்பதற்கல்ல - இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கிடையே உள்ள மனமார்ந்த முறைப்படியான ஒப்பந்தம்.

பல வருடங்களுக்கு முன்பாக இது ஒரு நல்ல அரசனுக்கும் அவன் பராமரிக்கவேண்டிய அவனுடைய ராஜ்யத்திற்கும் இடையே மேலும் இராஜ்யத்திலுள்ள ஜனங்கள் அவனிடம் விசுவாசமுள்ளவர்களாய் இருக்கவும் அவனுடைய கட்டளைகளைக் கைகொள்ளவும் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட ஒரு கட்டப்பட்ட வாக்குத்தத்தமாக இருந்தது.

அந்நாட்களில் கொடுக்கப்பட்டிருந்த ஒன்றை அறிகுறியாகக் கொண்டிருந்த 9 வித்தியாசப்பட்ட பழக்கங்கள் இருந்தன. கொடுக்கப்பட்டுள்ளவற்றிலிருந்து வாசிக்கவும்.

| | |
|---|---|
| **எபிரெயர் 8:6** | விசேஷித்த வாக்குத்தத்தங்களின்பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன்படிக்கைக்கு மத்தியஸ்தர் (1வது உடன்படிக்கை குறையுள்ளது). |
| **எபிரெயர் 8:13** | பழைய உடன்படிக்கை நாள்பட்டதும் உருவழிந்து போகக் காலம் சமீபித்திருக்கிறது. (உ.ம்) வாழைப்பழத்தோல். |
| **எரேமியா31:31-34** | ப.ஏ புதிய உடன்படிக்கைக்கு நாட்கள் வருகிறதென்று இஸ்ரவேலருக்கு சொல்கிறது. |
| **1-2** | கர்த்தர், தாம் அவர்களோடு பண்ணின தம் உடன்படிக்கையை தாம் ஒருக்காலும் முறித்து போடுவதில்லை என்றும், அவர்கள் கானான் தேசத்து அந்நிய ஜனங்களோடே உடன்படிக்கை பண்ணக்கூடாதென்று இஸ்ரவேலருக்குச் சொன்னார். (யோசுவா மரிப்பதற்கு சிறிது நாட்களுக்கு முன்) |



புதிய ஏற்பாட்டில் கர்த்தருடைய வாக்குத்தத்தங்களைக் குறித்து நாம் என்ன வாசிக்கிறோம்? விசேஷமாக இன்று இது நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

**FORM IV**

1. Place of Publication : Batlagundu.
2. Periodicity of its Publication : Monthly.
3. Printer`s Name : R.Sathiyamoorthi.
4. Address : 14/13/24 Melamanthai St., Batlagundu-624 202, Dindigul Dt, Tamil Nadu.
5. Whether citizen of India : Yes.
6. Publisher`s Name : B.Arjunan.
7. Address : 17/2/102 D/5 Rajan Nagar Batlagundu-624 202, Dindigul Dt, Tamil Nadu.
8. Editor`s Name : B.Arjunan.
9. Address : 17/2/102 D/5 Rajan Nagar Batlagundu-624 202, Dindigul Dt, Tamil Nadu.

I, B.Arjunan, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

sd

Date:29.02.2016 Signature of Publisher.

## ஆச்சரியம்

*K.R.K.Ravi Asir*

### எலும்புக் கூடு ஆணா ? பெண்ணா ?



புதைக்கப்பட்ட உடல் சில மாதங்கள் கழித்து தோண்டி எடுக்கப்பட்டால் இறுதியில் மிஞ்சுவது எலும்புக் கூடுதான். இந்த எலும்புக் கூட்டை வைத்தே ஆணா, பெண்ணா என்று கண்டு பிடித்து விடுகிறார்கள். இது எப்படி ?

சிறுவர்களின் எலும்புக் கூட்டை வைத்துக் கண்டிபிடிக்க முடியாது. ஆனால் தக்க வயதடைந்தவர்களின் எலும்புக் கூட்டை வைத்து எளிதில் கண்டுபிடிக்கப்படுகிறது.

ஒரு பெண்ணின் மண்டை ஒடு ஆணின் மண்டை ஓட்டை விட 200 க.செ.மீ குறைவானது. எடை குறைவோடு மென்மையாகவும் இருக்கும்.

முகபாகம் வட்டமாகவும் மேல்தாடையும் கீழ்த்தாடையும் சிறிதாகவும், தசைகளால் ஏற்படும் மேடுகளும் குறைந்தே காணப்படும். பெண்ணின் இடுப்பு எலும்பின் உட்பகுதியும் வட்டவடிவில் காணப்படும். கீழ்க் கோணம் விரிவாகவும் Sacrum என்ற எலும்பு சிறிதாகவும் அகலமாகவும் இருக்கும். இதனால் இடுப்பெலும்பின் பரிமாணம் 290 மி.மீ. இருக்கும்.

Humerus என்னும் கை எலும்பின் நீளம் ஆணுக்கு 322 மி.மீ. நீளமும், பெண்களுக்கு 290 மி.மீநீளமும் இருக்கும்.

Radius என்ற கை எலும்பின் நீளம் ஆணுக்கு 242 மி.மீ நீளமும், பெண்ணுக்கு 290 மி.மீ. நீளமும் இருக்கும்.

Femur என்ற கால் எலும்பு ஆணுக்கு 439 மி.மீ நீளமும், பெண்களுக்கு 201 மி.மீநீளமும் இருக்கும்.



பெண்கள் பகுதி

## எது தேவனுடைய புத்தகம்?
## Which Is God`s Book?

*-Betty*






பாடம் -7 தொடர்ச்சி

**நாம் வேதாகமத்தை எவ்வாறு பெற்றோம்?**

உலகிலுள்ள சகல புத்தகங்களின் மத்தியில் இன்னும் மார்க்க சம்பந்தமான "புனித வார்த்தைகள்" மத்தியிலும் வேதாகமம் தனித்தன்மை வாய்ந்ததாக இருக்கிறது. பெரும்பாலான புராதான நூல்களுக்கு ஒன்று அல்லது இரண்டு பிரதிகள் அல்லது முற்றுப் பெறாத பகுதிகள் மாத்திரமே இருக்கின்றன. சில சமயங்களில் அப்படிப்பட்ட நூல்களை நம்முடைய அறிவானது மற்ற எழுத்தாளர்களால் கூறப்பட்ட மேற்கோள்கள் மூலமான செய்திகள் வாயிலாக மாத்திரமே அறிந்து கொள்கிறது. ஆனாலும் பழைய புதிய ஏற்பாடுகளின் தொன்மையான பிரதிகள் மூலபாஷைகளில் நமக்கு இருக்கின்றன. பல்லாயிரக்கணக்கான கையெழுத்துப் பிரதிகளும் இன்று நமக்கு இருக்கின்றன. ஆரம்பகால எழுத்தாளர்களின் மேற்கோள்களில் இருந்து மாத்திமே முழுவேதாகமும் மீண்டும் ஒழுங்கமைக்கப்பட்டிருக்க முடியும். இது தேவனுடைய வார்த்தை என்று ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாகவும் இருந்தது.

வேதாகமம் எப்பொழுது எழுதப்பட்டது, அது யாரால் எழுதப்பட்டது? இதிகாசத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எழுத்தாளர்கள், தங்களை சுற்றியுள்ள மார்க்கங்களை குற்றஞ்சாட்டுகிறார்கள். ஏனென்றால் அந்த மதங்கள், வேதாகமத்தின் முதல் புத்தகங்கள் எழுதப்படுவதற்கு முன்பு ஆதிக்கம் பெற்றவைகளாய் இருந்தன ஆனால் அந்த எழுத்தாளர்கள் தங்களுடைய சுய அறிவிலிருந்து மாத்திரம் எழுதியிருப்பார்களேயாகில், தங்களை சுற்றியுள்ள மத நம்பிக்கைகளை அவர்கள் ஒருங்கிணைத்து எழுதியிருப்பார்களேயாகில், அவர்களுடைய செய்தியானது, அதே வகையான இதிகாசத்திற்குரிய மற்றும் மூட நம்பிக்கையாகிய மத சடங்காச்சாரங்கள் மற்றும் எழுதப்பட்ட சொற்றொடர்கள் நிறைந்தவைகளாக இருந்திருக்கும்.

ரஃபிக் சகரியா என்பவர் தம்முடைய "தேவனை கண்டு பிடித்தல்" என்ற புத்தகத்தில் கடவுளை குறித்த பழமையான கருத்துக்களை பின் வருமாறு விளக்கியிருக்கிறார்:

"இந்த தேவர்களும், தேவதைகளும் வரையப்பட்ட சித்திரங்களிலும், வர்ண வேலைகளிலும் சிற்ப வேலைப்பாடுகளிலும் வெவ்வேறு அமைப்புகளில், வெவ்வேறு வழிகளில் அடையாளப்படுத்தபட்டிருக்கின்றனர், இவைகள் அவர்கள் வளமாயிருந்த ஆரம்பகால நாகரீக காலங்களை நமக்கு ஞாபகம் ஊட்டுகின்றன. இவைகள் போஜனம் மற்றும் பானம்பண்ணி களியாட்டுகளில் ஈடுபடுவதாக காண்பிக்கப்பட்டிருக்கின்றன, இன்னும் கூலிக்காக போர் செய்தல், வெற்றிகளை கொண்டாடுதல் இவைகளும் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. பாலுறவுக்கு தொடர்பான